# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2015.03.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)

***2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம் (இதனகத்துப் பின்னர் முதன்மைச்சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, செலுத்தற்படற்பாலாதான வருமானவரியிலிருந்து அறவிடப்படும் சேவை விதிப்பனவை கழிப்பதற்கு வேறு ஏதேனும் வங்கியின், நிதிக் கம்பெனியின் அல்லது குத்தகைக்கு விடுதல் கம்பெனியின் தொழிலைக் கொள்கின்ற அல்லது அவற்றுடன் இணைகின்ற வங்கி, நிதிக் கம்பெனி அல்லது குத்தகைக் கம்பெனி என்பவற்றை அனுமதிப்பதற்காகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் இச்சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் இச்சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் இச்சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கு 10ஆ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான சட்டப்பயனானது இலத்திரனியல் தகவல் தொடர்புகள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகள் என்பனவற்றின் பயன்பாட்டுக்கு அதிகாரம் அளிப்பதற்கு அல்லது வசதியளிப்பதற்கும் ஆகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான சட்டப்பயனானது லக் சதோச லிமிட்ரெட்டை சேவை விதிப்பனவிலிருந்து விலக்களிப்பதாகும்.

*ச.வ.ஒ. 13/2015*

## *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** (1) இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) மூன்றாம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 7ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதி நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். 7ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதி நடைமுறைக்கு வந்திருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2014 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

''(3ஆ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது விசேடித்த வங்கி, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற நிதிக் கம்பெனி அல்லது 2000 ஆம் ஆண்டின் 56 ஆம்

2-PL 009222 -475 (2015/04)

இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பெனி, இலங்கை மத்திய வங்கியின் நிதிசார்துறை திரட்டுகை செயன்முறையின்கீழ் வேறு ஏதேனும் வங்கியின், நிதிக் கம்பெனியின் அல்லது குத்தகைக்கு விடுதல் கம்பெனியின் தொழிலை கொள்ளுகின்றவிடத்தும் அல்லது அதனுடன் இணைகின்ற விடத்தும் அத்துடன், கொள்ளலின் அல்லது இணைதலின் ஆண்டின் செலுத்தப்படற்பாலதான வருமானவரியி லிருந்து கழிப்பனவின் பின்னர் அத்தகைய வங்கிகளினால், நிதிசார் நிறுவனங்களினால் அல்லது குத்தகைக்கு விடுதல் கம்பெனிகளால் செலுத்தப்படும் சேவைவிதிப்பனவின் ஏதேனும் மீதி எஞ்சியிருக்கின்றவிடத்தும், அத்துடன் அது அத்தகைய வங்கிகளினால், நிதிக்கம்பெனிகளால் அல்லது குத்தகைக்குவிடுதல் கம்பெனிகளினால் செலுத்தப்படற் பாலதான வருமானவரியிலிருந்து முன்கொண்டு செல்லப் படுவதற்கும் ,கழிக்கப்படுவதற்கும் உரித்துடையதாக இருக்கின்றவிடத்தும், அப்போது அத்தகைய மீதியானது வியாபாரத்தை கொள்ளுதல் செய்த அல்லது வேறுவங்கி, நிதிக் கம்பெனி அல்லது நிதிக் குத்தகைக்கு விடுதல் கம்பெனியுடன் இணைந்த அதே வங்கி, நிதிக் கம்பெனி குத்தகைக்கு விடுதல் கம்பெனி தொழிலை தொடர்ந்து கொண்டு நடாத்திக் கொண்டிருந்தது என்றாற் போன்று, அதே வங்கி, நிதிக் கம்பெனி அல்லது நிதிக் குத்தகைக்கு விடுதல் கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படற்பாலதாதல் வேண் டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, “ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுத்து மூலம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.” என்னும் சொற்க ளுக்குப் பதிலாக, “ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரி யிடப்பட்டு எழுத்து மூலம் அல்லது ஆணையாளர் தலைமை யதிபதிக்கு இலத்திரனியல், தகவல் தொடர்புமூலம் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.”என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**4**. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "வரிமதிப்பீட்டாளருக்கு கொடுத்துதவுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிமதிப்பீட்டாளருக்கு கொடுத்துதவுதல் வேண்டும் அல்லது இலத்திரனியல் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**5**. இரண்டாயிரத்துப் பதின்நான்காம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எழுத்திலானஅறிவித்தல் மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான அறிவித்தல் மூலம் அல்லது இலத்திரனியல் தகவல் தொடர்பு மூலமான அறிவித்தல் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 10ஆ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

**6**. பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 10ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இலத்திரனியல் தகவல் தொடர்புகள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகளின் பயன்பாடு.

10ஆ. அமைச்சரானவர் உண்ணாட்டரசிறையின் ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மேல், 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவிடயங்களுக்காக இலத்திரனியல் தகவல் தொடர்புகள் அல்லது இலத்திரனியல் பதிவேடுகள் என்பவற்றின் பயன்பாட்டுக்கு அதிகாரமளிக்கும் அல்லது வசதியளிக்கும் நோக்கங்களுக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

**7**. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது "ஆள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் பின்வருமாறு மேலும் இத்தால் திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) (ஊ) என்னும் பந்தியில் "பரஸ்பரநிதியத்தை; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பரஸ்பரநிதியத்தை;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) (எ) என்னும் பந்தியில் "இலங்கை மத்திய வங்கி," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை மத்திய வங்கி ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) (எ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஏ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட லக் சதோச லிமிட்ரெட் (2011, ஏப்பிறல் 1ஆந் திகதியிலிருந்து பயனுறுவதாக)."

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்